# வரலாறு

## இராசரட்டை நாகரிகம்
## (பொலனறுவையின் இறுதிக்காலம் வரை)



தேர்ச்சி :- 5.0 இலங்கை நாகரிகத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்குகள் தொடர்பான விளக்கம்

தேர்ச்சி மட்டம் 5.2 :- இராசரட்டை நாகரிகத்தின் அரசியல் பொருளாதாரம் சமூகம், கலாச்சாரம், தொழினுட்பம் என்பவற்றை விளங்கல்

## 1ம் பராக்கிரமபாகு

I) இலங்கையில் ஒரே ஆட்சியை ஏற்படுத்தியமை

- ⇒ நாட்டை ஒன்றிணைத்தல்
- ⇒ ராசரட்டையைக் கைப்பற்றுவதற்கு கஜபாகுவுடன் போரிடல்
- ⇒ பொலநறுவையைக் கைப்பற்றுதல், கஜபாகுவுடன் உடன்படிக்கை மேற்கொள்ளல், பொலநறுவையின் அரசனாதல்
- ⇒ உருகுணையில் ஏற்பட்ட கிளர்ச்சிகள் - சுகலாதேவியைத் தோற்கடித்து அக் கிளர்ச்சியை அடக்குதல்
- ⇒ பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு ஒன்றிணைத்த ஆட்சியை மேற்கொண்டமை

இலங்கையை ஆண்ட மன்னர்களுள் மகாபராக்கிரமபாகு முக்கியமான இடத்தைப் பெற்றுக் கொள்கின்றான். ஏனெனில் 1ம் விஜயபாகுவின் பின் நாட்டை ஒன்றிணைத்த பலமான மன்னர்களுள் ஒருவராகப் மகாபராக்கிரமபாகு கருதப்படுகிறார். உண்மையில் மகாவிஜயபாகு சோழருக்கு எதிராக இராஜதந்திர முறையில் மேற் கொண்ட செயற்பாடுகள் அவன் மரணத்தின் பின்னர் நாட்டில் குழப்பகரமான சூழலை ஏற்படுத்தியது குறிப்பாக பாண்டிய கலிங்க வம்சங்களுக்கிடையில் மோதல் நிலைமையொன்று உருவாகியது. எனவே சுமார் கி.பி 1110 இலிருந்து மகாபராக்கிரமபாகு ஆட்சியைப் பெறும் கால கட்டம் வரை குழப்பமான சூழ்நிலை நீடித்திருந்தது.

தொகுப்பு : திரு.த.சுரேன், ஆசிரியர் (வரலாறு) (யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி)

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பராக்கிரமபாகு முன் நாட்டை ஒன்றிணைக்கும் சவால் காணப்பட்டது. ஏனெனில் 1ம் விஜயபாகுவின் மரணத்தை அடுத்து ஆட்சி உரிமை அவன் தம்பியான கஜபாகுவைச் சார்ந்திருந்த போதிலும் மகா விஜயபாகுவின் புதல்வன் 2ம் விக்கிரமபாகு பொலநறுவையின் கட்டுபாட்டைத் தன்வசம் எடுத்துக் கொண்டான். இதனால் கஜபாகு மித்தா இளவரசி கூட்டினர் மலையகம் உருகுணுரட்டை தென்பகுதி ஆகியவற்றைக் கைப்பற்றி தமக்குள் பகிர்ந்து ஆட்சிக்குரியவர்களாயினர். இதனால் நாட்டின் ஒருமைப்பாடு சீர் குலைந்தததது.

இச்சமயத்தில் மித்த இளவரசியின் மூத்த புதல்வனான மானாபரணன் விஜயபாகுவின் புதல்வியான இரத்தினாவளிக்கும் புதல்வனாகப் பரக்கிரமபாகு பிறந்தான். சிறுவயதில் தந்தையை இழந்த இவன் பாதுகாப்புக் கருதி தனது சிறிய தந்தையான கீர்த்தி ஸ்ரீமேக மன்னன் பாதுகாப்பில் வளர்ந்து வந்தான். ஆயினும் இவனுக்குத் தனது பேரனைப் போல் நாடு முழுவதும் ஆட்சி புரிய வேண்டுமென்ற ஆவல் காணப்பட்டது. இதன் முதல் படியாக உருகுணைரட்டையை ஒன்றுபடுத்தும் பணியை ஆரம்பித்தார். அந்த வகையில் இவனுக்கு இயல்பாகவே தகப்பனின் தக்கிணதேசம் கிடைத்தது. (மாயரட்டை) இதன் பின்னர் தனது பகுதியில் அபிவிருத்திப் பணியை மேற்கொண்டான்.

குறிப்பாகத் தக்கிண தேசத்தின் பண்டுவஸ்நுவர பகுதியில் பராக்கிரமபாகு என்ற பெயரில் தலைநகரம் ஒன்றை உருவாக்கி நிர்வாகத்தை மேற்கொண்டான். குறிப்பாக தக்கிண தேசத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்தினான். பராக்கிரமபுரத்திற்கு அண்மையில் காணப்பட்ட பண்டாவாவியை விரிவுபடுத்தினான். இதனூடாக விவசாயம் மேம்பட்டது. மேலும் அணைக்கட்டுகளை அமைத்து பஸ்துன்ரட்டைப் பகுதியில் காணப்பட்ட சதுப்பு நிலத்தை சீராக்கி விவசாயத்துக்குப் பெரும் பணியாற்றினான். அத்துடன் கற்பிட்டி, சிலாபம் போன்ற துறைமுகங்களை மேம்படுத்தியதினூடாக வர்த்தகத்தை வளப்படுத்தி அதிக இலாபம் பெற்றான். இவ்வாறு பொருளாதார ரீதியில் மாயரட்டை முன்னேறியதால் அவ்வளத்தை வைத்துக் கொண்டு இராசரட்டையைக் கைப்பற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினான்.





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

இதன்பின் இராசரட்டையைக் கைப்பற்றும் நடவடிக்கையை ஆரம்பித்தான். இதனால் இவன் 2ம் கஜபாகு மன்னனுடன் போர் புரிய வேண்டிய தேவை ஏற்பட்டது. அப் போரில் கஜபாகு ஆரம்பத்தில் தோல்வி அடைந்த போதிலும் இவன் கீர்த்தி ஸ்ரீ மேகனின் மகனான மானாபரணிடம் உதவி கோரினான். மானாபரணன் கஜபாகுவிற்கு உதவும் போர்வையில் பொலநறுவையைக் கைப்பற்றினான். இருந்த போதிலும் க ஜபாகுவை ஒரு சிறைக் கைதி போல் நடத்தினான். இதனால் கஜபாகு பராக்கிரமபாகுவிடம் உதவி கோரினான். இதனால் பராக்கிரமபாகு மானாபரணைத் தாக்கினான். இச்சந்தர்ப்பத்தில் தப்பியோடிய கஜபாகு மீண்டும் படை திரட்டி பராக்கிரமபாகுவுடன் போர் புரிய வந்தான். இச் சந்தர்ப்பத்தில் இரண்டு உறவினர் இடையே பெரும் யுத்தம் நடைபெறுவதை விரும்பாத சங்கத்தினர் தலையிட்டு சமதான உடன்படிக்கையைச் செய்து வைத்தனர். இவ் ஒப்பந்தத்தின் முக்கியமான கருத்து “ இவ்விரு மன்னர்களுள் யார் முதலில் இறக்கிறார்களே இறப்பவரின் இராச்சியம் இருப்பவரைச் சேரும்” என்பதாகும். இவ் ஒப்பந்தத்தின் பிரதி ஒன்று சங்கமு விகாரையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (குருணாகல் தம்புள்ள வீதியில் வல் சிறிபுர என்ற பகுதிக்கு அண்மையிலுள்ளது) இவ் ஒப்பந்தத்தின் அடிப்படையில் கஜபாகு இறக்கவே இராசரட்டைக்கு பராக்கிரமபாகு அரசனானான்.

இதன் பின்னர் சுகலாதேவி வசமிருந்த தந்ததாதுவும் பிச்சா பாத்திரமும் பராக்கிரமபாகு வசமானது. இவை இக்கால கட்டத்தில் அரசுரிமையின் சின்னமாகக் கருதப்பட்டது. இவற்றைப் பெற்றுக் கொண்ட பராக்கிரமபாகு கி.பி 1153இல் இலங்கையின் அரசனாக முடி சூட்டப்பட்டான்.





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

ii) சமயப்பணிகள்

- ⇒ சங்கத்தில் மறுசீரமைப்புச் செய்தமை
- ⇒ பிக்குகளை ஒன்றிணைத்தமை
- ⇒ திம்புலாகலை மாதங்க காசியப்ப தேரரின் தலைமையில் பிக்குகள் வழி நடத்தப்பட்டமை
- ⇒ பொலநறுவை கதிகாவத எனும் பிக்குகளிற்காக ஒழுக்க நெறிக்கோவையை கல்விகாரையில் செதுக்கியமை
- ⇒ ஆலாஹன பிரிவெனாவை மையமாகக் கொண்டு பொலநறுவையில் பல விகாரை-களை நிர்மாணித்தமை
- ⇒ பிறபகுதிகளிலிருந்து சமயத்தலங்களை புனர் நிர்மாணித்தமை
- ⇒ தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் சமய உறவுகளை மேற்கொண்டமை.

1ம் விஜயபாகுவிற்கும் பின் நாட்டில் குழப்பநிலை நிலவியதால் சங்கத்தாரின் செயற்பாடுகளில் மாற்றமேற்பட்டது. குறிப்பாக பிக்குகள் ஒழுக்கம் தவறி நடக்க முற்பட்டனர். குறிப்பாக நிக்காய பேதங்கள் ஏற்பட்டு சமயரீதியில் குழப்பநிலையொன்று நிலவியது. எனவே கி.பி 1153 இல் ஆட்சிக்கு வந்த பராக்கிரமபாகுவிறகு இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய தேவை எழுந்தது. எனவே இதற்காக சமய நீதிமன்றம் ஒன்றை பராக்கிரமபாகு அமைத்தான். இச்சமய நீதிமன்றத்திற்கு திம்புலாகலை மாதங்க காசியப்ப தேரரைத் தலைவராக நியமித்தார்.

இவர் தலைமையில் உருவாக்கப்பட்ட சமய நீதிமன்றம் பிக்குமாரின் ஒழுக்க நியதிகளை வகுத்தது. இந்நியதி கல்விகாரைச் சுவர்களில் காண முடியும். இதன் மூலம் ஒழுக்கம் தவறிய பிக்குகள் விசாரிக்கப்பட்டு காவி உடை களையப்பட்டனர். இவ்வாறு சங்கத்தாரிடையே காணப்பட்ட பேதங்களையும், ஒழுக்க சீர்கேடுகளையும் களைந்து இம் மன்னன் பௌத்தசமயத்தை மீண்டும் பழைய நிலைக்கு உயர்த்தினான்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

மேலும் இன்று நாம் பொலநறுவையில் காணப்படுகின்ற பிரதான விகாரைகள் இம்மன்னன் காலத்திலேயே அமைக்கப்பட்டது. குறிப்பாக உத்தராம விகாரை, கிரிவிகாரை, பபலு விகாரை, தெமிழமகாசாய முதலியவற்றைக் குறிப்பிட முடியும். அத்துடன் லங்காதிலக சிலைமனை போன்ற அழகான நிர்மாணங்களையும் நியமித்தான். இவன் காலத்திலேயே பொலநறுவை ஆலாஹன பிரிவனா உருவாக்கப்பட்டது. இப் பரிவெனாவ மையமாகக் கொண்டு பிக்குமாரின் கல்வி வளர்ச்சி ஏற்படுத்தப்பட்டதுடன் வைத்தியசாலைக் கட்டமைப்பொன்றும் உருவாக்கப்பட்டது. அத்துடன் சத்மல் பிரசாதய (ஏழடுக்கு மாளிகை) போன்ற கட்டடங்களும் இவனால் அமைக்கப்பட்டது.

அத்துடன் அநுராதபுரம் உள்ளிட்ட வேறு பகுதிகளில் காணப்பட்ட பண்டைய விகாரை-களைப் புனரமைத்து மீண்டும் பௌத்த மதத்தை நன்நிலைக்குக் கொண்டு வந்தான். தென் கிழக்காசிய நாடுகளுடன் சமய உறவுகளை மேற்கொண்டு இலங்கையைப் பௌத்த சமயத்தின் மத்திய நிலையமாக்கினான்.





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

iii) நீர்ப்பாசன நடவடிக்கைகளும் பொருளாதார அபிவிருத்தியும்.

⇒ தக்கிணதேசத்தில் தெதுறு ஓயாவை மறித்து அணை எழுப்பி விவசாயத்தை மேற்கொள்ளல்.

⇒ ஏராளமான வயல் நிலங்கள் பயிற்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டவை

⇒ பல குளங்களை இணைத்து உருவாக்கிய பராக்கிரம சமுத்திரம், மற்றும் புனரமைத்த குளங்கள் , கால்வாய்கள்

⇒ நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல்

⇒ மேலதிக உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்

பராக்கிரமபாகு இலங்கை வரலாற்றில் நீர்ப்பாசனத் துறையில் மிகப்பெரும் சாதனைகளைப் புரிந்துள்ளான். இவன் காலத்திற்கு முன்பும் விஜயபாகுவிற்குப் பின் நீர்ப்பாசனத்துறை சிறிது தளர்வுற்றிறிருந்தது. எனவே அவன் நீர்ப்பாசனத்துறை தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டிய தேவையேற்பட்டது. நீர்ப்பாசனத்தை பொறுத்தவரை “ வானில் இருந்து பொழியும் ஒரு துளி நீரையேனும் வீணாக்கக் கூடாது” என்ற எண்ணக்கருவுடன் பணியாற்றினார்.

முதல் முறை தான் ஆட்சிப் பொறுப்பையேற்ற மாயரட்டையில் (தக்கணப் பிரதேசத்தில்) தெதுறு ஓயாவை மறித்து மூன்று இடங்களில் அணைகளை அமைத்தான். அவையாவன கொட்டபத்த, சூகரநிக்கர, தோரதனதிக்க என்பன ஆகும். இவற்றினூடாக தக்கிணதேசத்தில் விவசாயம் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன் பயிரிடப்பட்ட நிலங்களின் அளவு அதிகரிக்கப்பட்டது. உதாரணமாக பஸ்துஸ்ரட்டைப் பகுதியில் காணப்பட்ட சதுப்பு நிலத்தை மீட்டெடுத்து நன்செய் நிலமாக மாற்றினார். இதனால் அவனால் விவசாய நிலப்பரப்பு அதிகரித்து விளைச்சல் அதிகரித்தது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இவன் இலங்கை முழுவதும் அரசானான பின் பொலனறுவையில் காணப்பட்ட தோப்பாவாவி, தும்புலுவாவி, எலமுது வாவி, கொக்காவாவி போன்றவற்றை இணைத்து பராக்கிரமசமுத்திரம் என்னும் மிகப்பெரும் நீர்ப்பாசனக் குளமொன்றை உருவாக்கினார். அக்கால இலங்கையில் மிகப்பெரும் குளமாக இது பெயர் பெற்று சூளவம்சக் கூற்றுக்கமைய இவனால் 165 அணைகளும், 391 கால்வாய்களும் 163 குளங்களும் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதில் பராக்கிரமபாகு சமுத்திரமே முதன்மைபடுத்தப்பட்டது.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- மகாபரக்கிரமபாகுவின் மற்றுமொரு சேவையாக அங்கமிடில்ல கால்வாயைக் குறிப்பிட முடியும். பராக்கிரம சமுத்திரத்திற்கு நீர் வழங்கும் பொருட்டு அம்பன் கங்கையை மறித்து அங்கமிடில்ல கால்வாயை அமைத்தார். இவ்வாறான செயற்பாடுகளினூடாகப் பொலநறுவை நெல்வளம் செழிக்கும் பிரதேசமாக மாறியது. அதனால் தான் கீழைத் தேசங்களின் தானியக் களஞ்சியமென இலங்கை அழைக்கப்பட்டது.

- இவ்வாறு உற்பத்திகள் அதிகரித்தமையால் நாடு பொருளாதார ரீதியில் தன்னிறைவு அடைந்ததுடன் மேலதிக பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிலைக்கு மாறியது.

iii) வெளிநாட்டுத் தொடர்பு

⇒ பர்மாவை ஆக்கிரமித்தல்

⇒ தென்னிந்தியாவில் சோழர்களின் எதிரிகளான பாண்டியர்களிற்கு ஆதரவளித்தல். இதனால் சோழர்களின் எதிர்ப்பை பெற்றமை

⇒ காம்போடியாவுடன் சிநேக தொடர்புகளைப் பேணியமை

⇒ பர்மாவுடன் சமயவழிசார் தொடர்புகளைப் பேணியமை

- முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் விசேடித்த இயல்பாக வெளிநாட்டுத் தொடர்புகள் கொள்ளப்படுகின்றது. இவன் காலத்தில் வெளிநாடு மீதான படையெடுப்பு மற்றும் சிநேக பூர்வமான உறவுகள் என்ற வகையில் தொடர்புகள் காணப்பட்டன. இதில் பர்மா மீதான படையெடுப்பு முக்கிய இடம் பெறுகின்றது. உண்மையில் பர்மாவுடன் விஜயபாகு காலத்தில் இருந்தே சிறந்த உறவோன்று காணப்பட்டு வந்தது. குறிப்பாக இலங்கையில் இருந்து செல்லும் கப்பல்களுக்கு பர்மா அரசன் (ராமஞ்ச தேசம்) ஒவ்வொரு யானைகளையும் பரிசளிப்பது வழமையாகக் காணப்பட்டது. ஆயினும் பராக்கிரமபாகு பதவியேற்ற சமயத்தில் ராமஞ்ச தேசத்தில் ஆட்சி மாற்றமொன்று இடம் பெற்றது. அங்கு பதவியேற்ற அளவுங்சிது என்ற மன்னன் இலங்கையுடன் விரோதம் பாராட்டும் செயற்பாடகளில் ஈடுபட்டு வந்தான். மேலும் கம்போடிய அரசனைத் திருமணம் செய்யச் சென்ற இலங்கை இளவரசியை கைது செய்தான்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

இதனால் கோபமுற்ற பராக்கிரமபாகு தமிழ் அதிகாரி ஆதித்த மற்றும் கித்த, நரககீர்த்தி போன்ற தளபதிகளின் கீழ் படைகளை அனுப்பினான். அப்படைகள் திருகோணமலைக்கு அண்மையிலிருக்கின்ற பல்லவங்க பகுதியிலிருந்து புறப்பட்டு பர்மா சென்று வெற்றி பெற்றதாக இலங்கை வம்ச ஏடுகள் கூறுகின்றன. எனினும் இவை பற்றி பர்மா ஆதாரங்களில் கூறவில்லை. எனினும் தெவனகல என்ற இடத்தில் மேற்கொண்ட ஆய்வுகளில் தளபதி நகரகீர்த்திக்கு வழங்கப்பட்ட கொடைகள் குறிப்பிட்டுள்ளன.

இவ்வாறு பர்மிய ஆக்கிரமிப்பு முடிந்ததும் பாண்டிய நாட்டுடனான போர் ஆரம்பமானது. இப் போர் பாண்டிய நாட்டின் சிம்மாசன உரிமைப் போராட்டத்துடன் நெருங்கிய தொடர்புடையது. சோழர்களின் உதவியைப் பெற்ற குலசேகர பாண்டியன் பராக்கிரம பாண்டியனைப் பதவி கவிழ்த்து விட்டான். பராக்கிரம பாண்டியன் பராக்கிரமபாகுவிடம் உதவி கோரினான் இச்சமயத்தில் சோழர் படைகளால் பராக்கிரமபாண்டியன் குடும்பம் கொல்லப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த பராக்கிரமபாகு தளபதி லங்காபுர, ஜெகத் விஜய என்பவரின் தலைமையில் படையெடுப்பொன்றை அனுப்பி மதுரையை வென்றதாக வம்சக்கதை ஆதாரங்கள் கூறுகின்றன. ஆயினும் இந்திய ஆதாரங்களில் இவ் வெற்றி தெளிவாகக் குறிப்பிடவில்லை. இவ்வாறு அந்நிய தேசங்களுடனான போரில் வெற்றிகளைப் பெற்ற அதே சமயத்தில் பராக்கிரமபாகு தென்கிழக்குகாசிய நாடுகளுடன் சிநேகபூர்வமான உறவுகளைப் பேணினான். குறிப்பாக கம்போடியாவுடன் சிறந்த உறவுகளைப் பேணிய இவன் பர்மாவுடன் சமய கலாசார தொடர்புகளைப் பேணினான். பர்மியக் கல்வெட்டின்படி பர்மாவில் பௌத்த சமயம் இலங்கையிலிருந்து வந்தவர்களால் தூ ய்மைப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு இலங்கையைப் பெறுத்தவரை வெளிநாட்டுடன் வெற்றிகரமாக படையெடுப்பை மேற் கொண்ட மன்னாக பராக்கிரமபாகு மதிக்கப்படுகின்றான்





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk